# கொரோனாவின் தாண்டவம்

## வலுவற்ற நிலைக்குத் தள்ளப்படும் வழக்கறிஞர்கள்



LAWYERS' FRATERNITY
TAMIL NADU
LAAS, MADURAI

INDIAN
SOCIAL INSTITUTE
BENGALURU


# ஊரடங்கின் தாக்கங்கள் பற்றிய ஓர் ஆய்வு

## பின்னனி:

கொரோனா தொற்றுநோயின் தீவிரத் தாக்கம் இதற்குமுன் இல்லாதவகையில், நாம் கற்பனைகூட செய்ய முடியாத அளவிற்கு உள்ளது. பலவகைகளில், இது சமீபத்தில் மனித வரலாற்றில் மிகப்பெரும் சோகத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நாட்டிலுள்ள ஏழை மக்கள் இதன் அதிர்ச்சிக்குள்ளாயிருக்கிற நிலையில், பொருளாதாரத்தில் பின் தங்கிய நடுத்தர வகுப்பு மக்களுக்குத் தம் குடும்பங்களின் பொருளாதாரத் தேவைகளைச் சமாளிப்பதிலும், தங்கள் மாண்பைக் காத்துக்கொள்வதிலும் மிகவும் சிரமப்பட்டுக்–கொண்டிருக்கிறார்கள். உருவில் மிகச்சிறிய கொரோனா வைரஸ், அதிர்ச்சி தரக்கூடிய சமத்துவமின்மையையும், பொதுவெளியில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

வழக்கறிஞர்களும் இந்தக்கொரோனாவின் தாக்கத்திற்கு விதிவிலக்கல்லர். இது பல வழக்கறிஞர்களிடையே, குறிப்பாக இளம் வழக்கறிஞர்களிடம் ஒரு வெற்றிடத்தை உருவாக்கியிருக்கிறது. அவர்களில் பலர், தங்களது இயலாமையையும், தங்கள் பாதிப்புக்களையும் வெளிப்படையாகச் சொல்லமுடியாமல் அவதிப்படுகின்றனர். அவர்களின் உணர்வுகளையும், நிச்சயமற்ற இச்சூழலையும், மனவேதனையையும் வெளிக்கொணர்வதற்கு மதுரை 'லாஸ்' (LAAS-Legal Action Advocacy Services) அமைப்பின் முயற்சியான வழக்கறிஞர்கள் தோழமை தமிழ்நாடு (LFTN- Lawyers' Fraternity Tamil Nadu); இதற்கான ஒரு தேவையான களத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது. கடந்த காலங்களில், லாஸ் அமைப்பு, வழக்கறிஞர்கள் தோழமை உறுப்பினர்களிடையே சமூக – அரசியல் மற்றும் சட்டப் பிரச்சனைகளை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகிச் செயல்படும் நோக்கில் வழக்கறிஞர்கள் பலரை ஒன்றாக இயக்கமாக இணைக்கும் பணியைச் செய்துகொண்டு வந்திருக்கிறது. இந்த கோவிட்–19 கொரோனா தொற்றுநோயின் பாதிப்பு வழக்கறிஞர்களின் பிரச்சனையை, அதிலும் குறிப்பாக இளம் மற்றும் பொருளாதாரத்தில் சிரமத்திற்குள்ளாகியிருக்கும் வழக்கறிஞர்களின் துயரங்களை வெளிக்கொணர்வதற்கு ஓர் அரிய வாய்ப்பாகவே சில உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

வழக்கறிஞர்கள் தோழமை தமிழ்நாடு (LFTN) உறுப்பினர்களிடம் இந்த ஆய்வு தொடர்பான தேவை, சாத்தியக் கூறுகள் பற்றி விவாதித்தபோது, சிலர், இந்த ஆய்வு பொருளாதாரப் பிரச்சனைகளையும், வழக்கறிஞர் பணிகள் மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்களையும் தொடர்புபடுத்தியதாக இருக்கவேண்டும் என்று பரிந்துரைத்தனர். பல இளம் வழக்கறிஞர்களும் அதில் பங்கேற்று, தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்க ஒரு சிறிய, எளிய வடிவிலான வினாத்தாள் தயாரிக்கப்படவேண்டும் என்றும் கருத்து தெரிவித்தனர். பெறப்பட்ட பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் வழக்கறிஞர்கள் தோழமை தமிழ்நாடு (LFTN-LAAS) மற்றும் பெங்களூரு சமூக ஆராய்ச்சி, பயிற்சி அமைப்பான இந்திய சமூக நிறுவனம் (Indian Social Institute, Bengaluru – ISI-B) ஆகியவை இணைந்து இந்த ஆய்வை நடத்தின.



## ஆய்வின் நோக்கங்கள் :

இந்த ஆய்வு நான்கு முக்கிய நோக்கங்களைக் கொண்டது:

1. ஊரடங்கு காலத்தின்போது, வழக்கறிஞர்கள் சந்தித்த பொருளாதாரப் பிரச்சனைகள் சார்ந்த அனுபவங்களை எடுத்துச் சொல்வது.
2. மிகவும் பாதிக்கப்பட்ட வழக்கறிஞர் பணி மற்றும் வழக்காடிகள் மீது ஊரடங்கு ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் புரிந்துகொள்வது.
3. ஊரடங்கின்போது பின்பற்றப்பட்ட மின்னனு வழி மனு தாக்கல் செய்தல் (e-filing), காணொளி காட்சி வழி (video conferencing) வழக்கு நடத்துதல் போன்றவற்றின் செயல்திறன்களை புரிந்துகொள்வது.
4. வழக்கறிஞர்களுக்கு உதவி செய்ய தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் (Bar Council of Tamil Nadu & Puducherry-BCTN&P) எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி விவாதித்து வழக்கறிஞர் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புகளை வரும்காலத்தில் குறைக்க, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் குழுமத்திற்கு ஆக்கப்பூர்வமான பரிந்துரைகளை எடுத்துரைப்பது.




> "இந்த ஆய்வில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகள் பல வழக்கறிஞர்கள் சந்தித்த முக்கியமான, சிக்கலான பிரச்சனைகளை ஆழமாக ஆய்வு செய்கிறது."
>
> *- L.F. ஷிகா ஷாகுல், வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம்.*

## ஆய்வுமுறை:

ஒரு சிறிய வினாத்தாள் தயாரிக்கப்பட்டு, சில அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களிடம் கலந்தாலோசித்து கருத்துக்கள் கேட்கப்பட்டன. அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் இறுதி வினாத்தாள் தயாரிக்கப்பட்டது. இந்த ஆய்வில் ஆர்வமுடைய அனைவருக்கும் வினாத்தாள் எளிதில் சென்றடையும் நோக்கத்தில், கூகுல் படிவத்தில் (Google Form) தயாரிக்கப்பட்டு, தரவுகளை பதிவு செய்ய மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்ஆப் வழியாக வினாத்தாள் அனுப்பப்பட்டு ஆன்லைனில் பதில்கள் பெறப்பட்டன.

## A. பதில் அளித்தவர்களின் விபரங்கள்

### பதில் அளித்தோரின் பாலினமும், வயதும்




**படம் 1: பதில் அளித்தோரின் பாலினம்**

ஒரு வார காலத்திற்குள், சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் பணிசெய்யும் வழக்கறிஞர்கள் மற்றும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மாவட்ட நீதின்றங்கள், தாலுகா நீதிமன்றங்களில் பணியாற்றி வரும் 173 வழக்கறிஞர்கள் நமது வினாத்தாளுக்கு ஆன்லைனில் பதிலளித்தனர். அவர்களில் 3 பேர் வழக்கறிஞர் குழுமத்தில் பதிவு செய்ததற்குப் பின் தாங்கள் பணி செய்வதில்லை என்று கூறினர். இந்த 3 பேரைத் தவிர, மீதி 170 வழக்கறிஞர்களின் பதில்கள் ஆய்வு செய்யப்பட்டன.


ஆண்களுக்கும், பெண்களுக்குமான பாலின இடை–வெளி அதிகமாகவே இருந்தது. பதிலளித்த மொத்தம் 170 பேரில், 145 பேர் ஆண் வழக்கறிஞர்கள். 25 பேர் பெண் வழக்கறிஞர்கள்.

சிலருக்கு, இப்படி நிகழ்ந்திருப்பது வெளிப்படை–யானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். எனினும், இந்த உண்மை நமது சிந்தனைக்கான விமர்சனக் கேள்விகளை எழுப்புகிறது. பாலின வேறுபாடு இந்த வழக்கறிஞர் பணியில் நிலவுகிறதா? இது பெண்கள் பணிசெய்வதற்குச் சாதகமான துறையா?

இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 25 முதல் 35 வயது வரையுள்ளவர்கள் 58 பேர் இருந்தனர் (34.1%). 35 வயதுக்குக் கீழே இருப்போரை இந்திய அரசு இளைஞர்களாகக் கருதுகிறது. இந்தத் தொழிலில், மூத்த வழக்கறிஞர்களின் மேற்பார்வையில் தொழில் கற்றுக்கொள்வதால் இது ஒரு முக்கியமான வயது என்று கருதப்படுகிறது. இத்தொழிலுக்கான அடித்தளம் இந்த வயதில்தான் அமைகிறது. 36 முதல் 50 வயதுடையோர் 81 பேரும், 51 முதல் 70 வயது வரையுடையோர் 31 பேரும் பதிலளித்திருந்தனர்.

சிலர் பல்வேறு நீதிமன்றங்களில் பணிசெய்து வந்தாலும், தற்போது அவர்கள் வேலைசெய்து கொண்டிருக்கும் முதன்மையான இடத்தைக் குறிப்பிடுமாறு கேட்கப்–பட்டிருந்தார்கள். மாவட்ட நீதிமன்றங்களிலும் மற்றும் உயர்நீதிமன்றத்திலும் பணியாற்றிவரும் வழக்கறிஞர்களின் பதில்கள்தான் அதிகமானதாக இருந்தன. பதிலளித்–தவர்களில் அதிகபட்சமாக 78 பேர், உயர்நீதிமன்றத்திலும், அதற்கு இணையாக 75 பேர் மாவட்ட நீதிமன்றங்–களிலும் பணிபுரிபவர்கள். பதிலளித்தவர்களில் 15 பேர்கள் மட்டுமே தாலுகா நீதிமன்றங்களில் பணியாற்றுபவர்கள்.


### இடம், ஆண்டு, பணியின் தன்மை




**படம் 2: பதிலளித்தவர்கள் முதன்மையாகப் பணிசெய்யும் நீதிமன்றங்கள்**

மின்னனு தொடர்புகள், இணையதளம் மூலம் தொடர்புகொள்ளுதல் பற்றிய பழக்கமில்லாமையின் காரணத்தால்தான் தாலுகா நீதிமன்றங்களில் பணியாற்றும் வழக்கறிஞர்களின் பங்கேற்பு குறைந்ததற்கு முக்கியக் காரணம் என்பது மேலும் கண்டறியப்பட்டது. வயதுமூப்பின் காரணமாகவும், தனிப்பட்ட காரணங்களாலும் இருவர் பயிற்சி செய்வதை நிறுத்திவிட்டனர். பதிலளித்திருந்த 25 பெண் வழக்கறிஞர்களில் 2 பேர் தாலுகா நீதிமன்றங்களில் பணிசெய்து கொண்டிருக்கிறார்கள். மீதி 11 பேர் மாவட்ட நீதிமன்றங்களிலும், 12 பேர் உயர்நீதிமன்றத்திலும் பணிசெய்து கொண்டு வருகிறார்கள்.

**படம் 3: பணி அனுபவ ஆண்டுகள்**





பதிலளித்தவர்களில் சுமார் 91 பேர் (53.6%) 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணி அனுபவம் பெற்றவர்கள். இன்னும் 36 பேர் (21.2%) குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் 43 பேர் (25.3%) மட்டும்தான் 5 வருடங்களுக்கும் குறைவான அனுபவம் கொண்டவர்கள்.

மொத்தத்தில் பதிலளித்தவர்களில், சுமார் 107 பேர் (62.9%) சுயமாக (independently) சட்டப்பணிகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறியிருந்தார்கள். சுமார் 46 பேர் (27.1%) இளம் வழக்கறிஞர்களாக அலுவலகங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். 8 பேர் மட்டுமே மூத்த வழக்கறிஞர்கள். மீதி 9 பேர் சட்டப்பணிகள் செய்யும் நிறுவனங்களிலும், வங்கிகள், நிறுவனங்களிலும் வழக்கறிஞர்களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

இளம் வழக்கறிஞர்களாக அலுவலகங்களில் பணியாற்றிவரும் 46 பேர்களில், 26 பேர் 5 வருடங்களுக்கும் குறைவான பணி செய்பவர்களாகவும், 13 பேர் 5 முதல் 10 ஆண்டுகள் வரை பணி அனுபவம் உள்ளவர்களாகவும், மேலும் 7 பேர் 10 ஆண்டுகளுக்கும் மேல் அனுபவம் பெற்ற மூத்த வழக்கறிஞர்களிடம் இளம் வழக்கறிஞர்களாகப் பணி செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். இந்தத் தகவல் சட்டப்பணிகளில் உள்ள சிக்கல்களையும், பதிலளித்தவர்களின் பணம் சம்பாதிக்கும் திறனையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. இளம் வழக்கறிஞர்கள் பயிற்சி பெறுபவர்களாகக் கருதப்படுவதால் சில அலுவலகங்கள் மட்டுமே இவர்களுக்கு சம்பளம் தருகின்றன. தாங்கள் சொந்தமாகச் சம்பாதிக்கும் வரை, இளம் வழக்கறிஞர்கள் பிற வருமான ஆதாரங்களைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

## B. பதிலளித்தவர்களின் வருமானமும், பொருளாதாரப் பிரச்சனைகளும்

சுமார் 113 பேர் (66.5%) தங்கள் சட்டப்பணிகள் மூலம் சுயமாகச் சம்பாதிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதேசமயம், 30 பேர் (17.6%) தாங்கள் சார்ந்திருக்கும் சட்ட அலுவலகங்கள், நிறுவனங்கள், வங்கிகள் அல்லது சில நிறுவனங்களில் ஆலோசகர்களாகப் பணியாற்றுவதன் மூலம் மாதவருமானமோ அல்லது குறிப்பிட்ட வேளைகளில் ஊதியம் பெறுகிறவர்களாக இருக்கிறார்கள்.





**படம் 4: பதிலளித்தவர்களின் வருமானம் ஈட்டும் நிலை**

சுமார் 27 பேர் (15.9%) தொடர்ச்சியான வருமானம் இல்லாமல் இளம் வழக்கறிஞர்களாகப் பணிசெய்து வருகிறார்கள். மூத்த வழக்கறிஞர்களுக்கு உதவி செய்தல், வழக்குகளைப் பின்தொடர்தல், வழக்குகளைப் பதிவுசெய்தல் அல்லது நீதிமன்றங்களில் வழக்கறிஞரின் பதிலியாகச் செயல்படுதல் ஆகிய பணிகளைச் செய்வதற்குக் கட்சிக்காரர்களிடமிருந்து சிறிய அளவில் பண உதவிகளைப் பெறுகிறார்கள். எப்போதாவது தங்கள் மூத்த வழக்கறிஞர்களிடமிருந்து குறிப்பிட்ட ஊதியத்தைப் பெறுகிறார்கள். அல்லது மூத்த வழக்கறிஞர்களிடம் வாடிக்கையாளர்களை அறிமுகப்-படுத்தினால், அவர்கள் பெறும் ஊதியத்திலிருந்து சிறுதொகையைப் பெறுகிறார்கள்.

கொரோனா ஊரடங்கின்போது, தனியாக அல்லது சுயமாக தொழில், வேலை செய்யும், மாதச் சம்பளம் பெறாத மற்ற பணியாளர்களுக்கு ஏற்பட்டதைப்போலவே, நீதிமன்றப் பணிகள் முடங்கியதால், வழக்காடிகளுக்கு சேவை செய்ய முடியாத நிலையில் வழக்கறிஞர்களின் வருமானம் நின்றுபோனது. பொதுவாக, தங்கள் கட்சிக்காரர்களுக்கு வழக்கு தொடர்பான பணிகளைச் செய்வதன் மூலமும், அல்லது பிற வழக்கறிஞர்களுக்கு சில பணிகளைச் செய்து தருவதன் மூலமும் பெரும்பாலான இளம் வழக்கறிஞர்கள் தினமும் ஒரு சிறுதொகையை ஊதியமாகப் பெற்றுவந்தார்கள். இந்த இளம் வழக்கறிஞர்கள் கொரோனா ஊரடங்கினால் மிகவும் பாதிக்கப்பட்டு, தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிறார்கள்.

நீடித்த ஊரடங்கு காலத்தில், தமது அன்றாட குடும்பப் பொருளாதாரத் தேவைகளை எப்படிச் சமாளித்தார்கள் என்று கண்டறிய 8 விருப்பத் தெரிவுகள் வினாத்தாளில் கொடுக்கப்பட்டு அதில் 2 பொருத்தமான பதில்களைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். பதிலளித்த மொத்தம் 170 பேர்களிடமிருந்து 219 பதில்கள் பெறப்பட்டன. அதாவது, 49 பேர் இரண்டு பதில்களையும், மீதிப்பேர் ஒரு பதிலையும் தேர்ந்தெடுத்து எழுதியிருந்தனர். அவர்களின் பதில்கள் 6 பெரிய தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டன. இக்கேள்விகள் பல்பதில் வகையாக இருந்ததால், பெறப்பட்ட 219 பதில்களுக்கு இணையாக மொத்த சதவீதம் 128.8% என்று காட்டப்பட்டுள்ளது.

**படம் 5: பதிலளித்தவர்கள் பணத்தேவையை எவ்வாறு சமாளித்தார்கள்?**





**ஆய்வில் மூன்று முக்கிய போக்குகள் தெளிவாகப் புலப்படுகின்றன:** 1. சேமிப்பு மற்றும் முதலீடுகளை வைத்துச் சமாளித்தல். 2. சம்பளம் பெறும் கணவன்/மனைவி அல்லது பெற்றோர்களின் உதவி. 3. வாங்கிய கடன்கள் அல்லது அடகு-வைக்கப்பட்ட அல்லது விற்ற நகைகள் மூலம் பெற்ற பணம்.

10 வருடங்களுக்கு மேலாக சட்டப் பணிகள் செய்து கொண்டிருப்போர் தமது சேமிப்பு மற்றும் முதலீடுகளை வைத்து சமாளிப்பதாக அதிக பதில்கள் வந்துள்ளன. மீதி 2 பதில்கள் 20 வருடங்களுக்குக் குறைவாகப் பணி செய்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

> **“சிரமத்திற்கு உள்ளாகியிருக்கும் வழக்கறிஞர்களின் குரலொலியாக இந்த ஆய்வு இருப்பதால், இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சென்றடைந்து, அவர்களைச் செயல்படச் செய்யும் என்று நம்புகிறோம்”**
>
> *திருமதி. ஜெயந்தி ராணி, வழக்குரைஞர், திருச்சி.*

ஏறக்குறைய 50 பேர் (29.4%) தங்கள் பதில்களில் தாங்கள் கடன் வாங்கியோ அல்லது நகைகளை விற்றோ வாழ்க்கையை நடத்த வேண்டியிருப்பதாகத் தெரிவித்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது. 17 பேர் (10%) மட்டுமே தாங்கள் பணிசெய்யும் அலுவலகங்கள் மூலம் மாத ஊதியம் பெறுவதாக அவர்கள் பதில்கள் குறிப்பிடுகின்றன. நீண்ட காலமாக பயிற்சி செய்து வருபவர்கள் தங்களது சேமிப்புகள், முதலீடுகள் மூலம் நிலையான வருமானம் பெறுகிறார்கள்.


பதிலளித்தவர்களில் சுமார் 50% பேர் எந்தவித உதவியும் தமக்கு இல்லை என்றும் சட்டப்பணிகள் மூலம் பெறப்படும் ஊதியத்தையே நம்பியிருக்கிறதாக 5-வது வரைபடம் தெளிவாகக் காட்டுகிறது. நீதிமன்றங்கள் மூடப்பட்டிருக்கும்வரை, பிறரை நம்பி வாழ வேண்டிய நிலையும் அல்லது தங்கள் சொத்துக்களை விற்று வாழும் நிலையும் உள்ளது. வழக்கறிஞர் பணியின் தொடக்க நிலையில், இப்பணியின் நிரந்தரமற்ற வருவாய் தன்மையை உணர்ந்துகொண்டு, நிலையான ஊதியம் பெறுபவரைத் தம் வாழ்க்கைத் துணைவராக தேடுவது பெரும்பாலான வழக்கறிஞர்களின் எழுதப்படாத விதியாக இருக்கிறது. துரதிஷ்டவசமாக குறைந்த வருமானமும், குறைந்த சமூக பாதுகாப்பும் இப்பணியில் பின்னிப் பிணைந்த அம்சங்கள்.




**படம் 6: வழக்கறிஞர்களுக்கு உதவிய அமைப்புகள் / அமைப்புகள்**

பதிலளித்தவர்களில் 26 பேர் மட்டும் (15.3%) மூத்த வழக்கறிஞர்களின் உதவியைப் பெற்றுள்ளதாகவும், 22 பேர் (12.9%) வழக்கறிஞர் சங்கத்திடமிருந்து உதவி பெற்றதாகவும், 7 பேர் மட்டும் (4.1%) பார் கவுன்சிலின் உதவியை பெறுவதாகத் தெளிவாக படம்: 6 காட்டுகிறது. சிக்கலான இச்சூழலில் வழக்கறிஞர்களின் தேவைகளைப் புரிந்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு தமிழ்நாடு புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் மற்றும் வழக்கறிஞர் சங்கம் முன்வரவில்லை என்று சிலரும், வழக்கறிஞர் குழுமம் உதவி செய்ய முன்வைத்த நிபந்தனைகள் நியாயமானதாக இல்லை என்று சிலரும் குற்றம் சாட்டுகிறார்கள். அதே வேளையில் பல்வேறு வழக்கறிஞர் சங்கங்கள மற்றும் தன்னார்வ வழக்கறிஞர்கள் நீதிபதிகளிடமிருந்தும், மூத்த வழக்கறிஞர்களிடமிருந்தும், வழக்கறிஞர்-களிடமிருந்தும் நிதியுதவி பெற்று உதவி தேவைப்படும் வழக்கறிஞர்களுக்கு மளிகைப் பொருட்களும், காய்கறிகளும் விநியோகித்த நிகழ்வையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.







**படம் 7:எந்த வழக்கறிஞர்கள் பொருளா–தாரத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள்?**

மொத்தமுள்ள 6 விருப்பத்தேர்வுகளிலிருந்து, இரண்டு தெரிவுகளைத் தேர்ந்தெடுக்குமாறு, பதிலளிப்பவர்களிடம் கேட்கப்பட்டது. சட்டப்பணியில் ஈடுபட்டுள்ள வழக்–கறிஞர்களில் பொருளாதாரத்தால் மிகவும் பாதிக்–கப்பட்டுள்ளவர்களுக்கு உதவிசெய்யும் நோக்கில் அவர்களைக் கண்டுபிடிக்கும் அடிப்படையை இந்த 7–வது படம் தெளிவாகக் காட்டுகிறது. ஊதியம் பெறும் வாழ்க்கைத் துணைவர் அல்லது பிற வருமான ஆதாரங்கள் உள்ளவர்கள் இரண்டாவது அளவுகோளாக உள்ளனர். 5 ஆண்டுகளுக்கும் குறைவான பணி அனுபவம் உடையோர் மூன்றாவது அளவுகோளாக உள்ளனர். இளம் வழக்கறிஞர்களும், 5 வருடத்திற்கும் குறைவான பணி அனுபவம் உடையோரும் ஒரே தளத்தில் இருப்பவர்கள். இந்த மூன்று அளவு–கோள்களும் தாலுகா, மாவட்டம், உயர்நீதிமன்றம் ஆகிய எந்த நீதிமன்றங்களில் பணிசெய்தாலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

## C.சட்டப்பணியின் எதிர்கால பாதிப்பும், மிகவும் பாதிக்கப்படும் வழக்காடிகளும்





படம் 8: ஊரடங்கு சட்டப்பணியின் எதிர்காலத்தைப் பாதிக்கும்

சுமார் 93 பேர் (54.7%) வழக்கறிஞர் தொழிலில் ஊரடங்கின் பாதிப்பு எதிர்காலத்திலும் நீடித்து இருக்கும் என்று உணர்கிறார்கள். பதிலளித்த 93 பேரில், 6 பேர் தாலுகா நீதிமன்றங்களிலும், 43 பேர் மாவட்ட நீதிமன்றங்களிலம், 44 பேர் உயர்நீதிமன்றத்திலும் பணிபுரிந்து வருகின்றனர். சுமார் 51 பேர் (30%) இந்த ஊரடங்கு தங்களின் எதிர்காலத்தை 'ஓரளவு' தொழில்ரீதியாக பாதிக்கும் என்று உணர்கிறார்கள்.

இந்த ஊரடங்கின்போது தங்கள் கட்சிக்–காரர்களிடமிருந்து 30 பேர் (17.6%) மட்டுமே அடிக்கடி அழைப்புகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் 2 பேர் தாலுகா நீதிமன்றங்களிலும், 11 பேர் மாவட்ட நீதி–மன்றங்களிலும், 17 பேர் உயர்நீதிமன்றத்திலும் பணி–புரிகிறார்கள். 60 பேர் (35.3%) சில நேரங்களில் மட்டுமே அழைப்புகளைப் பெற்றிருக்கிறார்கள். சுமார் 47 சதவிகிதம் பேர் எப்போதாவது அல்லது ஒருபோதும் அழைப்புகளைப் பெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

நீதிமன்றங்கள் திறக்கப்பட்டாலும், தங்கள் கட்சிக்காரர்களுக்குத் தமது பணிகளைச் சரிவரச் செய்து, நீடித்த வருமானம் பெற முடியும் என்ற நம்பிக்கையிழந்து இருக்கிறார்கள் வழக்கறிஞர்கள். இன்றைய பொருளாதார வீழ்ச்சி காரணமாகவும் தங்கள் தொழிலில் உறுதியற்ற நிலை இருப்பதாகவும், இது பற்றிய கவலையும், பயமும் உள்ளதாக உணர்கிறார்கள். வழக்காடிகளும் அவர்களின் அவசர அடிப்படைத் தேவைகளைச் சமாளிக்க வேண்டியிருப்பதால், வழக்கறிஞருக்கு வழங்க வேண்டிய குறைந்தபட்ச உழைப்பூதியத்தையும் அவர்களால் வழங்க முடியாது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் மற்றும் வழக்கறிஞர் சங்கங்கள் இணைந்து செயல்திட்டங்களை வகுத்து இந்தப் பிரச்சனையைச் சமாளிக்காவிட்டால், ஏழை கட்சிக்காரர்கள் இதே நிலையைச் சந்திப்பார்கள் அல்லது நீதிக்காக ஏழைமக்கள் நீதிமன்றங்களை தேடி வரும் சூழல் வெகுவாகக் குறையும்.




**படம் 9: எந்த வகையான வழக்காடிகள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்?**


வழக்காடிகளுக்கான சேவையில் 5 முக்கியமானவற்றை அடையாளங்கண்டு, அவற்றில் ஒன்றை மட்டும் தேர்வு செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தார்கள். சிறையில் இருப்பவர்கள், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டோர், குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருப்பவர்கள், ஜீவனாம்சம் மற்றும் ஓய்வூதிய வழக்குத் தொடர்ந்தோர் ஆகியோர் மிகவும் பாதிப்புக்குள்ளான நிலையிலுள்ள கட்சிக்காரர்களாக 20-க்கும் மேற்பட்டவர் பதிலளித்துள்ளனர். ஓய்வூதிய வழக்குகளும், குடும்பநல நீதிமன்ற வழக்குகளும் தமது கட்சிக்காரர்களை அதிகமாக பாதிப்புக்குள்ளாக்குவதாக 24 பேரும் பதிலளித்தனர். நீதிமன்றங்கள் செயல்படாததால், குற்றம் சாட்டப்பட்டு வழக்குகளால் சிறையில் இருப்பவர்கள் ஜாமீனில் வெளிவர விண்ணப்பிக்க வாய்ப்பு இல்லை. விசாரணை கைதிகளும், தண்டனை பெற்றவர்களும் தங்கள் வழக்குகள் விசாரணைக்கு வந்தால், தமக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளனர். ‘பிணை (bail) என்பது விதி. சிறை என்பது விதிவிலக்கு’ என்ற கருத்தும் ஊரடங்கால் முடங்கியிருப்பதால், சிறையில் அடைக்கப்பட்டு விடுதலைக்காக ஏங்கி நிற்கும் பல அப்பாவிக்கைதிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஊரடங்கின்போது, குடும்ப வன்முறைகளும், குழந்தைகளுக்கெதிரான வன்முறைகளும் அதிகரித்திருப்பதாகவும் பல பத்திரிக்கைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. ஊரடங்கால் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாததால் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும்கூட நீதி மறுக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிவாரணத்திற்காக வழக்குப்பதிவு செய்தவர்களும் மாதாந்திரப் பராமரிப்புச் செலவிற்காக உத்தரவுகள் பெற்றுள்ளவர்களும் அதற்கான ஆணைகள் செயல்படுத்தப்படாததால் அவர்களால் அதன் பலன்களை அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கின்றனர்.

## D. மின்னணு வழி வழக்குப் பதிவும், வீடியோ கான்பரன்சிங் வசதியும்

அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பதிலும், மனிதர்களின் மனிதாபிமானத்தைப் பாதுகாத்து, அவர்களின் மரியாதையை மதிக்கும் விதத்தில் இந்த உரிமைகளை முழுஅளவில் அவர்கள் அனுபவிக்க உதவுவதிலும்தான் மனித வாழ்வின் மிகப்பெரிய மதிப்பீடு வெளிப்படுகிறது. நீதி ஒருபோதும் உறங்குவதில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதமாக, மிக முக்கிய அவசர வழக்குகள் மட்டும் மின்னணுவழி பதிவு செய்யவும் மற்றும் வீடியோ கான்பரன்சிங் வழி வழக்குகளை நடத்தவும் வசதிகளை மாவட்ட, உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**படம் 10: மின்னணு வழி வழக்குப் பதிவும், வீடியோ கான்பரன்சிங் வசதியும்**







மூன்று கேள்விகள் கேட்கப்பட்டன: அவசரப் பதிவுகள் ஏதேனும் செய்தீர்களா? வழக்குகளை விரைவாக நடத்துவதற்கு வீடியோ கான்பரன்சிங் விசாரணை வசதிகள் உதவுமா? ஊரடங்கிற்குப் பிறகும் வீடியோ கான்பரன்சிங் வழியாக வழக்கு விசாரணை நடத்தும் வசதிகளைப் பரிந்துரைப்பீர்களா? இதற்கு 41 பேர் (24.1%) மின்னணுப் பதிவுமூலம் வழக்குப்பதியும் வசதிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை படம்:10 தெளிவாகக் காட்டுகிறது. பதிலளித்த இந்த 41 பேரில், ஒருவர் தாலுகா நீதிமன்றத்தை முதன்மை–யாகக்கொண்டு பணி செய்துவருகிறார். 21 பேர் மாவட்ட நீதிமன்றங்களிலும், 19 பேர் உயர்நீதி–மன்றத்திலும் முதன்மையாகக்கொண்டு பணிபுரிந்து–வருகின்றனர். உயர்நீதிமன்றத்தில் பணி செய்து–வருவதாக பதிலளித்த மொத்தம் 78 பேர்களில், 24.3% மட்டுமே அவசர மின்னணு வழக்கு பதிவுக்காக நீதிமன்றத்தை அணுகியுள்ளதை இது காட்டுகிறது.

விரைவாக வழக்குகளை நடத்திமுடிப்பதற்கும் மின்னணு வழி வழக்கு பதிவும், வீடியோ கான்பரன்சிங் வசதியும் உதவுதாக 21 பேர் மட்டுமே சொல்லியிருந்தனர். இவர்களிலும் 3 பேர் தாலுகா நீதிமன்றங்களிலும், 9 பேர் மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்திலும் பணிபுரிந்துவருபவர்கள்.

பதிலளித்தவர்களில் 21 பேர் மட்டுமே ஊரடங்கு முடிந்தபிறகும் மின்னணு வழி வழக்கு பதிவும், வீடியோ கான்பரன்சிங் வசதியும் தொடர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களில் 13 பேர் மாவட்ட நீதிமன்றங்களிலும், 7 பேர் உயர்நீதிமன்றத்திலும், பணியாற்றும் நிலையில், ஒருவர் தன் சொந்தக் காரணங்களுக்காக பணியை நிறுத்தியிருக்கிறார். இந்த பதில்களிலிருந்து பல வழக்கறிஞர்கள், வழக்குகள் இணையதள வழியில் விசாரணை நடைபெறுவதை விரும்பவில்லை என்று தெரிகிறது. இந்த இணையவழி விசாரணை என்பது புதிதாக இருப்பதால், பல வழக்கறிஞர்கள் தயாராக இல்லை என்பதோடு அவர்கள் அதற்கான பயிற்சியும் பெற்றிருக்கவில்லை. சிலர் தமக்கு வீடியோ அழைப்பு வசதிகள்கூட இல்லையென்று கருத்துக் கூறியிருக்கின்றனர். இணையதள இணைப்பு என்பது ஆடம்பரமாக உள்ளது. பல வழக்கறிஞர்களுக்கு செல்போன்கள் மட்டுமே இணையதள இணைப்புக் கருவியாக உள்ளது. சரியான நீதிவழங்குவதற்கு சாட்சிகளை நேரடியாக விசாரிப்பது அவசியமானதொன்றாக இருப்பதால், விசாரணை நீதிமன்றங்களில் இணையதளம் மூலம் விசாரிப்பது சாத்தியமில்லாதது.

## E. பொருளாதாரப் பாதிப்புகளை சமாளிக்க தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் (BCTN&P) எடுத்துள்ள முயற்சிகள் பற்றிய ஆய்வு

ஊரடங்கால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வழக்–கறிஞர்களுக்கு உதவி செய்ய தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் எடுத்துள்ள முயற்சிகள் மகிழ்ச்சிதரக்கூடியவை. பதிலளித்தவர்களில் 132 பேர் (77.6%) தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் அளிக்கும் பொருளாதார உதவி பற்றித் தெரிந்து வைத்துள்ளனர். இந்தத் திட்டம் வழக்கறிஞர் மத்தியில் சென்று சேர்ந்திருக்கிறது என்பதை இந்தத் தகவல் சுட்டிக்காட்டுகிறது.




படம் 11: தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழும முயற்சிகளில் திருப்தி நிலை

பதிலளித்தவர்களில் 21 பேர் (15.9%) தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழும நடவடிக்கைகள் பற்றி திருப்தியடைந்துள்ளனர். 57 பேர் (43.2%) ஓரளவு மட்டுமே திருப்தியடைந்துள்ளனர். 35 பேர் அதுபற்றி திருப்தியே இல்லையென்றும், 19 பேர் பதில் கூறுவதற்கு எதுவுமில்லை என்றும் கூறியுள்ளனர். வரலாற்றில் முதன்முறையாக, மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்கள், தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் மற்றும் இந்திய வழக்கறிஞர் குழுமத்தின் வழக்கறிஞர்கள் நலவாழ்வு நிதிக் குழு ஆகியோரிடமிருந்து ரூபாய் 5 கோடியை நிதியாகப் பெற்றுள்ளது. நிதி உதவி தேவைப்படும் வழக்கறிஞர்களுக்கு அழைப்பு விடுத்து, அதன்படி, உதவிகேட்டு விண்ணப்பித்த 17,059 வழக்கறிஞர்களில் 12,000 பேருக்கு தலா, ரூபாய் 4,000– உதவித்தொகையாகக் கொடுக்கப்பட்டது.

> "வழக்கறிஞர் குழுமம் மற்றும் அரசு, வழக்கறிஞர்மீது கொண்டிருக்கும் அக்கறையற்ற எண்ணத்தை மாற்றுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கு, இந்த ஆய்வு, வழக்கறிஞர் சமூகத்திற்கு உதவும் என்று நான் நம்புகிறேன்."
>
> *- திரு.எஸ்.மனோகர், மூத்த வழக்கறிஞர், மதுரை.*




### சில கவன ஈர்ப்புகள்:

- ✓ பல்வேறு ஆதாரங்களை ஆய்வு செய்ததில் தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமத்தில் சுமார் 1,15,000 வழக்கறிஞர்கள் பதிவு செய்திருக்கிறதாக தெரியவருகிறது. அவர்களில் பணிச் சான்றிதழ் பெறவும், பணிபுரியும் இடம் குறித்த தகவல்களையும் தமிழக–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமத்திடம் தகவல்களை சமர்ப்பித்த மற்றும் அகில இந்திய வழக்கறிஞர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றுச் சான்றிதழ்களை தாக்கல் செய்த வழக்கறிஞர்கள் சுமார் 67,000 பேர் உள்ளனர்.
- ✓ இந்த உதவித் திட்டம் மிகவும் தாமதமாகவே அறிவிக்கப்பட்டதோடு, அவர்கள் உதவிய மிகக்குறைந்த தொகையும் 2020 மே 8 –க்குப் பிறகே காலந்தாழ்த்தி வழங்கப்பட்டது.
- ✓ மிகவும் உதவி தேவைப்படும் வழக்கறிஞர்களுக்கு உதவி தரப்படாமல், வசதி உள்ளவர்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டதால், தேர்வு செய்யப்பட்டதன் அளவுகோளை பற்றி சில வழக்கறிஞர்கள் கேள்வி எழுப்புகின்றனர். குழப்பம், பாகுபாடு, தாமதம் ஆகியன இருந்ததாகவும் கருத்துக்கூறினர்.
- ✓ பாதிப்புக்குள்ளான பல வழக்கறிஞர்களுக்கு இணையதள வசதியில்லாத சமயத்தில், குறுகிய கால இடைவெளியில் விண்ணப்பிக்க கட்டாயப்படுத்தியது, தமிழக–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமத்தின் 'புரிந்துகொள்ளாத அணுகுமுறை' என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர்.
- ✓ பல வழக்கறிஞர்களுக்கு நிதி உதவி தேவைப்படும் என்ற நிலை நன்றாகத் தெரிந்திருந்தபோதும், அரசாங்கத்திடம் எடுத்துரைத்து மேலும் அதிக நிதி உதவியை வழக்கறிஞர் குழுமம் பெற்றுத்தந்திருக்கலாம் என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

## F. பரிந்துரைகள்

சில அனுபவமிக்க வழக்கறிஞர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் அடிப்படையில், பதிலளித்தவர்களின் கருத்துக்களைக் கண்டறிய ஓர் ஆக்கப்பூர்வமான பரிந்துரை முன்வைக்கப்பட்டது.




**படம் 12: சில குறிப்பிட்ட வருடங்களுக்கும், வயதுவரைக்கும் இளம் வழக்கறிஞர்களுக்கான உதவித்தொகை (stipend).**

எதிர்காலத்தில் இதுபோன்று ஏற்படும் அவசரகாலச் சூழ்நிலைகளின்போது நிதி சிக்கல்களால் சிரமத்திற்குள்ளாகும் புதிதாக வழக்கறிஞர் குழுமத்தில் பதிவு செய்யும் வழக்கறிஞர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்களுக்கு குறிப்பிட்ட வயது அல்லது ஆண்டுகளுக்குப் மாதாந்திர உதவித்தொகை (stipend) வழங்குவது சரியான வழிமுறையாகுமா என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டது. பதிலளித்தவர்களில் 102 பேர் (60%) ஒரே மனதுடன் இக்கருத்தை ஆதரித்தனர். 37 பேர் (21.8%) இந்தத் திட்டம் சாத்தியப்படுமா என்று உறுதியாகத் தெரியவில்லை என்றும், 31 பேர் (18.2%) இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தெரிவித்தனர்.

ஏதிர்காலத்தில் இது போன்ற அவசரகால சூழல்களில் வருமான சிக்கல்கள் ஏற்படுகிறபோது, செய்யவேண்டிய ஆக்கப்பூர்வ செயல்பாடுகள் பற்றிய ஆலோசனைக் கருத்துக்களைக் கூறுமாறு கேட்கப்பட்டிருந்தனர். அவர்களும், தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம், அரசு மற்றும் வழக்கறிஞர் சமூகத்திற்கு ஆக்கப்பூர்வமான பரிந்துரைகளை முன்வைத்தனர்.

## தமிழ்நாடு–புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் (BCTN & P) மற்றும் அரசுக்கு முன்வைக்கும் பரிந்தரைகள்

- இளம் வழக்கறிஞர்களுக்கான மாதாந்திர உதவித்தொகைத் திட்டம் (stipend scheme) உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும். வழக்கறிஞர் குழுமமும், அரசாங்கமும் தாமதமின்றி இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இந்தத் திட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்திருந்தால், பல இளம் வழக்கறிஞர்களின் பொருளாதார சிரமங்கள் வெகுவாகக் குறைந்திருக்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது, தொடர்ச்சியாக வழக்கறிஞர் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மட்டுமே இந்த பலன் சென்றடையுமாறு சரியான நெறிமுறைகளை உறுதிப்படுத்தவேண்டும். இதைச் செயல்படுத்தும்போது, போலிச் சான்றிதழ்கள் வைத்திருக்கும் வழக்கறிஞர்களை உடனடியாக வழக்கறிஞர் குழும பதிவிலிருந்து நீக்கிவிடவேண்டும். வழக்கறிஞர் குழுமம் என்பது திறமையும், அனுபவம் வாய்ந்தவர்களின் கூட்டமைப்பேயொழிய, சட்டம் பயின்றவர்களின் கூடாரமல்ல. அதன் உறுப்பினர்கள் முழுநேரப் பணியாற்றுகிறார்களா? என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அப்போதுதான், நலத்திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, உறுப்பினர்களும் மிகுந்த பயன்பெற உதவும்.

- வழக்கறிஞர்கள் மாதச் சம்பளம் பெறும் வகுப்பை சாராதவர்கள் என்பதால், அவசரகாலச் சூழல்கள் ஏற்படும்போது, அவர்களுக்குப் பொருளாதார உதவிசெய்வதற்கு நிரந்தர வைப்பு நிதி (corpus fund) அல்லது அவசரகால நிதி (emergency fund) ஒன்றை உருவாக்குதல் அவசியம். இத்தொழில் உடலுழைப்பு இல்லாத பணியாகக் கருதப்பட்டபோதிலும், அதிகம் சம்பாதிக்கும் புகழ்பெற்ற மூத்த வழக்கறிஞராக இல்லாவிட்டால், எந்த வங்கிகளும் கடன்கூட தருவதற்குத் தயாராக இல்லை. வங்கிகள் எதிர்பார்க்கும் கடனுக்கு ஈடான சொத்துக்களும் பல வழக்கறிஞர்களிடம் இல்லை. உதவி தேவைப்படும் வழக்கறிஞர்களுக்குக் குறைந்த வட்டியில் வங்கிகள் கடன் உதவி வழங்க வழக்கறிஞர் குழுமமும், வழக்கறிஞர் சங்கங்களும் கடனைத் திருப்பி செலுத்துவதற்கான உத்தரவாதத்தை கொடுக்க முன்வரவேண்டும்.

- வழக்கறிஞர்கள் எளிதில் கடனுதவி பெற்றுக்கொள்ள உதவும் வகையில் அனைத்து வழக்கறிஞர் சங்கங்களிலும் கூட்டுறவு வங்கி (lawyers' cooperative bank) அல்லது சிக்கன நாணயச் சங்கம் (thrift society) ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

- தற்போது வழக்கறிஞர்களுக்கு விபத்து காப்பீட்டுத் திட்டம் (accident insurance policy) மட்டுமே உள்ளது. பொது மருத்துவ காப்பீட்டுத்திட்டம் (general health insurance policy) வழக்கறிஞருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும்.

- நிதியுதவி தேவைப்படும் அனைத்து வழக்கறிஞர்களுக்கும், சட்ட அமைச்சகத்தின் கைவசம் இருக்கும் வழக்கறிஞர்கள் நலவாழ்வு நிதியிலிருந்து (advocate welfare fund) ஒரு பகுதியை அரசும், வழக்கறிஞர் குழுமமும் விடுவித்திருக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படும் உதவித் தொகையை இறுதிகாலத்தில் கொடுக்கப்படும் நிதியிலிருந்து கழித்துக்கொள்ளலாம். அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் ஏற்பாடு செய்திருக்கமுடியும்.

- மின்னனு வழி வழக்கு தாக்கல் மற்றும் வீடியோ கான்பரன்சிங் வழி வழக்கு நடத்துவதை வழக்கறிஞர்கள் மீது திணிக்கக்கூடாது. அவசரகாலச் சூழல்களில் இந்தமுறைகளை சாத்தியப்படுத்த, இவற்றை நீதித்துறை சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக கட்டணமில்லா அதிவேக இணையதள வசதி கொண்ட மையங்களை உருவாக்கவும், வழக்கறிஞர்களுக்கு இதற்கான பயிற்சிகளை கொடுக்கவும் முதலீடு செய்ய அரசு முன்வர வேண்டும்.

- இந்த உன்னதமான வழக்கறிஞர் பணிக்கு அரசு தேவையான முக்கியத்துவம் தருவதில்லை. வழக்கறிஞர்களை மாற்றாந்தாய் மனநிலையோடு அணுகுவதோடு அவர்களின் தேவைகளையும், அவசியங்களையும் புரிந்துகொள்ள அரசு மறுக்கிறது என்று பலரும் உணர்ந்துள்ளனர். இத்தொழிலின் மேன்மையைப் போற்றவும், நீதி ஒருபோதும் உறங்காது என்பதை உறுதிப்படுத்தவும் தமிழ்நாடு – புதுச்சேரி வழக்கறிஞர் குழுமம் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## வழக்கறிஞர் சமூகத்திற்கான பரிந்துரைகள்:

- பல வழக்கறிஞர் அலுவலகங்களில், குறிப்பாக விசாரணை நீதிமன்றங்களில் இளம் வழக்கறிஞர்களுக்கு மாத சம்பளம் தரக்கூடிய வழக்கம் இல்லை. இது மாற வேண்டும். மூத்த வழக்கறிஞர்கள் தாங்களாக முன்வந்து இளம் வழக்கறிஞர்களுக்கு நியாயமான, வாழ்கையை நடத்தக்கூடிய, கண்ணியமான ஊதியத்தை பெருந்தன்மையோடு வழங்கவேண்டும். இளம் வழக்கறிஞர்களுக்கு மாதம் ரூ.10000, அல்லது குறைந்தபட்ச ஊதியத்திற்கு சமமான மாத ஊதியம் வழங்கப்படவேண்டும். அப்படியிருந்தால்தான் இளம் வழக்கறிஞர்கள் உற்சாகப்படுத்தப்படுவார்கள், அவர்கள் கண்ணியமும் அடிப்படை தேவைகளும் நிவர்த்தி செய்யப்படும்.
- பொருளாதார வீழ்ச்சியுடன் கூடிய இந்த ஊரடங்கு வழக்கறிஞர் தொழிலை முடக்கும். வழக்குகளுக்காக அணுகினால் வழக்கறிஞர்கள் அதிக பணம் கேட்கக்கூடும் என்ற பயம் கட்சிக்காரர்களிடம் இருக்கிறது. இதுகூட தங்கள் வழக்கறிஞர்களை கட்சிக்காரர்கள் அழைக்காமல் இருப்பதற்கான காரணமாக இருக்க வாய்ப்புண்டு. எப்படியிருந்தாலும், நீதிக்காக ஏங்கி நிற்கும் ஏழை மக்கள் கடந்த காலங்களில் வழக்கறிஞர் கட்டணம் செலுத்தியதைப் போல, தற்போதும் செலுத்தமுடியாத நிலையில் உள்ளார்கள். எந்தவித எதிர்பார்ப்புகளும் இல்லாமல், ஏழைமக்களுக்கு உதவி செய்வதை வழக்கறிஞர் சமூகம் தொடர வேண்டும்.
- பணியில் சேரும் இளம் வழக்கறிஞர்கள் சட்ட அலுவலகங்களுடன் இணைந்து பயிற்சி பெறவேண்டும். சட்ட அலுவலகங்கங்கள் அவைகளின் இளம் வழக்கறிஞர்களின் நலன்களை கவனித்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால், வழக்கறிஞர் சமூகம் அரசிடமிருந்து மதிக்கத்தக்க இடைவெளியைப் பராமரித்து கண்ணியமாக நடந்துகொள்ள முடியும். பண உதவிக்காக அரசாங்கத்தைச் சார்ந்து இருக்கும் எந்த ஒரு விஷயமும் வழக்கறிஞர்களின் சுதந்திரத்தையும், இறுதியாக தொழிலின் மாண்பையும் அழிக்கும்.



## நிறைவாக

வழக்கறிஞர்கள் ஏழை வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று ஒருபோதும் பொதுமக்களால் பார்க்கப்படுவதில்லை. இந்த வழக்கறிஞர் சமூகத்தின் போராட்டங்கள், வலிகள், வேதனைகள் பற்றி மிகச்சிலரே உணர்ந்துள்ளனர். கொரோனா ஊரடங்கு வழக்கறிஞர் சமூகத்தின், குறிப்பாக இளம் வழக்கறிஞர்களின் மறைந்து கிடக்கும் பாதிப்புகளை வெளிக்கொண்டுவந்திருக்கிறது. மேற்கூறிய பரிந்துரைகள் ஆக்கப்பூர்வமானதும், நடைமுறைக்குச் சாத்தியமானவையும் ஆகும். வழக்றிஞர் குழுமம் மற்றும் அரசு, வழக்கறிஞர்கள் சமூகத்தின் கடினமான யதார்த்தங்களை புரிந்துகொண்டு, இந்த வழக்கறிஞர் பணியின் மாண்பை பாதுகாக்க, பராமரிக்க வழிகளை கண்டறிய வேண்டும்.

வழக்கறிஞர் தோழமை தமிழ்நாடு (LFTN-LAAS), இந்திய சமூக நிறுவனம், பெங்களூரு (ISI-B) ஆகிய இரு அமைப்புகளும், இந்த ஆய்வை நடத்துவதற்கு ஆதரவளித்தவர்களுக்கும், தாராளமனதுடன் பதிலளித்த வழக்கறிஞர் சமூகத்திற்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றன. உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்!



“இந்த முன்முயற்சியும், வினாத்தாளும் மதிப்புமிக்கது, சரியான நேரத்தில் எடுக்கபட்ட முயற்சி என்று பார்க்கிறேன். இந்த ஆய்வை நான் மனமார வரவேற்கிறேன்.”

*– முனைவர். V. சுரேஷ், வழக்கறிஞர், தேசிய பொதுச் செயலாளர், மக்கள் சிவில் உரிமைக் கழகம், உறுப்பினர், நிறுவனர் நிர்வாகி, Barefoot Academy of Governance, இயக்குநர், சட்டம், கொள்கைகள் மற்றும் மனித உரிமைக் கல்வி மையம்.*

“இந்த இரு நிறுவனங்களும் எடுத்துள்ள இந்த முயற்சிகள் மிகவும் பாராட்டத்தகுந்தவை. வழக்கறிஞர்களிடமிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களும், இதைத் தயாரித்தவர்கள் இதையொட்டி நடத்திய ஆய்வும், எதிர்பாராமல் உருவாகியுள்ள இச்சிக்கலின்போது, இளம் வழக்கறிஞர்கள் படும் வேதனையை வெளிக் கொண்டுவந்துள்ளன. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை வழக்கறிஞர் குழுமமும், அரசு அதிகாரிகளும், தீவிரமாகப் பரிசீலனை செய்வது அவசியம்.”

*– திரு. ஐசக் மோகன்லால், மூத்த வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம்.*

**வெளியீடு: ஜூன் 2020**

**வெளியிடுவோர்:**

வழக்கறிஞர். **சந்தனம்,சே.ச.**
ஒருங்கிணைப்பாளர்
வழக்கறிஞர் தோழமை தமிழ்நாடு (LFTN)
LAAS மையம், உலகநேரி
மதுரை – 625 107.

முனைவர். வழக்கறிஞர். **ஜோசப் சேவியர்,சே.ச.**
இயக்குநர், இந்திய சமூக நிறுவனம் (ISI)
24, பென்சன் சாலை, பென்சன் டவுன்
பெங்களூர் – 560 046.
www.isibangalore.com

**தமிழாக்க உதவி: ஜான் பிரபாகர். மதுரை**